மே 2007 விலை ரூ. 10/-


அபிராமி கடைக்கண்களே

# அபிராமி



ஆன்மிகம், ஜோதிடம் மற்றும் பல்சுவை விருந்து

நிறுவிய ஆசிரியர்: பாலஜோசியர் வித்வான் வே.லட்சுமணன்

புரவலர்: ஸத்ஸேவாரத்னம்
டாக்டர் ஏ.சி.முத்தையா

சிறப்பாசிரியர்: செந்தமிழ்த் திலகம்
தேவகி முத்தையா



ஆசிரியர்: சுதா ரகுராமன்

## சென்னையில் வாழ்ந்த சித்தர்

# ஸ்ரீ சக்கரையம்மாள்

"சென்னைக் கோமளீசுரன் பேட்டையில் ஓர் அம்மையார் இருந்தார். அவர் காலஞ்சென்ற டாக்டர் நஞ்சுண்டராவின் குரு என்று உலகம் சொல்லும். அவ்வம்மையார் பறவையைப் போல வானத்தில் பறப்பார். ஒரு முறை யான் வசித்த கல்லூரியின் மேல் மாடியில் பறந்து வந்து நின்றார். மானுடம் பறக்கிறதெனில் உலகம்அதை வியப்பென்று சொல்ல வேண்டுவதில்லை. அக்காலத்தில் சென்னையில் வசித்த விஞ்ஞானியர் பலர் சூழ்ந்து சூழ்ந்து அம்மையார் நிலையை ஆராய்வர். அப்பொழுது சென்னை மியூஸியத் தலைவராயிருந்த ஓர் ஐரோப்பியரால் பறவையார் நிலை பெரிதும் ஆராயப்பட்டது. அம்மையார் பறவை இனத்தில் சேர்ந்தவரென்றும், அவரிடம் பறவைக்குரிய கருவி கரண அமைப்புகள் சில உள்ளன என்றும், கூர்தல் (Evolution) அறப்படி அத்தகைய பிறவி இயற்கையில் அமைதல் கூடும் என்றும் அவரால் விளக்கப்பட்டன. அவர் விளக்கம் மற்றவரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. யான் 'தேசபக்தன்' ஆசிரியனான போது டாக்டர் நஞ்சுண்டராவிடம் நெருங்கிப் பழகுதல் நேர்ந்தது. பறவையாரைப் பற்றி அவரை நான் விசாரித்தேன். அவர் 'அம்மையார் சித்தரினத்தில் சேர்ந்தவர்' என்று கூறினார். பறவை நாயகியார் நிலை மனோதத்துவத்துக்கு எட்டுவதா? உன்னிப்பாருங்கள்.''



தமிழ்த்தென்றல் திரு.வி.க. எழுதிய 'உள்ளொளி' என்ற நூலில் அவர் மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார். மனிதராவது பறப்பதாவது, இது வெறும் கட்டுக்கதை என்று இதைத் தள்ளியிருப்போம். ஏனெனில், புராணங்களில் படிப்பதைத் தவிர நேரில் கண்டதாக நம்பத் தகுந்த யாரும் இப்படிச் சொல்லி நாம் கேட்டதில்லை. ஆனால் காந்தி வழி நடந்து சத்தியத்தில் நின்ற சான்றோரான திரு. வி.க. இதைச் சொல்லியிருக்கிறார். எனவே இந்த உண்மையை, அதிசயத்தை நாம் ஒப்புக் கொள்ளலாம். இப்படிப் பறந்து வந்து திரு.வி.க.வின் முன் இறங்கிய விந்தைப் பெண்மணிதான் பின்னாளில் சக்கரையம்மாள் என்று பிரசித்தி பெற்ற ஞானி.

ஏ.தேவராஜ முதலியார் என்ற ரமண பக்தர் 'அனுதினமும் பகவானுடன்' என்ற தனது நூலில் 17-3-1946 அன்று ரமணரோடு நடந்த ஓர் உரையாடலைக் குறிப்பிடுகிறார். டாக்டர் நஞ்சுண்டராவின் மனைவி காலமானதைப் பற்றிப் பேசும்போது, டாக்டரும் அவரது மனைவியும் தான் விரூபாக்ஷா குகையில் வசிக்கும்போதே தன்னை வந்து பார்த்ததாகவும், அதற்கு பின் டாக்டர் குடும்பத்தோடு காசி யாத்திரைக்குச் சென்று விட்டுத் திரும்பும்போது தனது குருவாக அவர் கருதியவரும், சில சித்திகள் கைவரப் பட்டவருமான சக்கரையம்மாளுடன் மீண்டும் வந்ததாகவும் பகவான் நினைவு கூர்ந்தார் என்று முதலியார் எழுதுகிறார்.

திரு நஞ்சுண்டராவ் சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் சென்னையில் வாழ்ந்த பிரசித்தி பெற்ற ஆங்கில முறை மருத்தவர். அரசாங்கத்தில் பெரிய பணியில் இருந்தவர். ஆனால் சிறந்த தேசபக்தர். சுவாமி விவேகானந்தரின் சீடர். பாரதியின் பேரன்பர். பாரதி ஆசிரியராக இருந்த 'பால

பாரதம்' பத்திரிகையின் ஸ்தாபகர். ராஜாஜி, அன்னிபெசண்ட், ஹிந்து கஸ்தூரி ரங்கய்யங்கார், வ.வே.சு.ஐயர், சி.பி. ராமஸ்வாமி ஐயர் ஆகியோர் எல்லோருக்கும் நண்பர். அவர் சென்னை ராமகிருஷ்ண மடத்தில் ராமகிருஷ்ணரின் 76–வது ஜயந்தி விழாவில் "பிரபஞ்ச உணர்வு அல்லது முக்தி பற்றியே வேதாந்தக் கருத்து" என்று ஒரு சொற்பொழிவாற்றினார். அது பின்னால் நூல் வடிவில் 1909–ஆம் ஆண்டு ஜி.ஏ.நடேசன் கம்பெனியால் வெளியிடப்பட்டது. அந்த நூலில் தன் குருவான ஸ்ரீசக்கரையம்மாளைப் பற்றிப் பல விஷயங்களை அவர் எழுதியிருக்கிறார்.



நஞ்சுண்டராவ் சொல்கிறார்: "முக்தியென்பது என்ன என்பதை எழுத்தறிவில்லாத எளிய அந்தணப் பெண்மணி ஒருவரைக் கண்டபின்தான் நான் தெரிந்து கொண்டேன். அவர்தான் கோமளீஸ்வரன் மடத்தின் ஸ்ரீ சக்கரையம்மா. அவரது மகிமைக்கு ஒரே சான்று அவர் எப்போதும் இருந்த ஆனந்தநிலைதான். இப்படி உடலின் ஒவ்வொரு அணுவிலும் எப்போதும் பரிபூரணானந்தத்தை வெளிப்படுத்திய வேறு யாரையும் நான் கண்டதில்லை... பத்தாண்டுகள் தன்னுள்ளே ஆத்மீகப் போர் புரிந்து தன் முப்பதாவது வயதில் தியானத்தில் ஆழ்ந்திருந்தபோது, திடீரென ஒரு தெய்வீகப் பேரொளியைக் கண்டு, "ஒளி, பரவொளி, என் வாழ்வின் சாரமான பேரொளி' என்று பரவசமானார். அன்றிலிருந்து இறுதிநாள் வரை அம்மாவுக்கு என்றும் பேரானந்த நிலைதான்."



இப்படி மகரிஷிகளாலும், திரு.வி.க.வாலும் டாக்டர் நஞ்சுண்டராவாலும் நினைவு கூறப்பட்ட ஸ்ரீ சக்கரையம்மாள் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென்னையில் வாழ்ந்தவர். வடஆற்காடு மாவட்டத்திலுள்ள தேவிகாபுரம் என்ற சிற்றூரில் 1854-ஆம் ஆண்டு ஆனந்த வருடம் சிவாச்சாரியார் குடும்பத்தில் பிறந்தார். அவரது இயற்பெயர் அனந்தாம்பாள். சிறு வயதிலேயே தாயை இழந்தார். தந்தை சேஷ குருக்கள் மறுமணம் செய்து கொண்டார். அனந்தாம்பாளுக்கு எட்டு வயதாகும் போது சிற்றன்னையின் சகோதரரும், பதினைந்து வயது மூத்தவருமான சாம்ப சிவனை இரண்டாம் தாரமாக மணந்தார். சாம்பசிவன் எழும்பூரிலுள்ள கோமளீஸ்வரன் மடத்தின் அதிபதி. அவர் வகித்த பதவிக்குச் சிறிதும் அருகதையற்ற, நடத்தை கெட்ட மனிதர். 13 வயதில் பூப்பெய்திய அனந்தாம்பாளுக்கு தெய்வ பக்தி நிறைந்திருந்தது. ஆனால் இல்லறத்தில் நாட்டமில்லை. எனினும் கணவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை யெல்லாம் செய்து விட்டுப் பின்னர் கோமளீஸ்வரர் ஆலயத்தில் தியானம் வழிபாட்டிலேயே நாளைக் கழிப்பார். நடத்தை கெட்ட கணவனோடு இப்படி ஏழாண்டுகள் வாழ்ந்த பிறகு, கணவன் இறக்க, தன் இருபதாவது வயதில் தலையை மழித்துக் கொண்டு, தன் முப்பதாவது வயது வரை வீட்டின் மொட்டை மாடியிலே அமர்ந்து தவமிருந்தார் அனந்தாம்பாள். அதன் பயனாக ஒரு நாள் ஒளிக்கெல்லாம் ஒளியான பரவெ(ா)ளியைக் கண்டார். அதன்பின் அவர் ஒரு ஜீவன் முக்தராக வாழ்ந்தார். உலகம் தான் அவரைத் தெரிந்து கொள்ளவில்லை.

பரவெளியைக் கண்டபின் சக்கரையம்மாள் ஸ்ரீகோமளீஸ்வரர் கோயில் வாசலில் அமர்ந்து யாரைப் பார்த்தாலும் உரத்த குரலில் சிரிப்பார்களாம். அவரை சித்த ஸ்வாதீனம் இல்லாதவர் என்றே எல்லோரும் நினைத்தார்கள். பின்னால் அவரைக் குருவாக ஏற்றுக் கொண்ட நஞ்சுண்டராவும் இரண்டாண்டு காலம் அப்படித்தான் நினைத்தாராம். பிறகுதான் அம்மாளின் பரிபூரண நிலையை அறிந்து தன் நாட்குறிப்பில், "அப்படி நீ என்னை நினைக்க வைத்தது என் பிராரப்த கர்மம்" என்று வருத்தப்படுகிறார்.

சக்கரையம்மாளின் பெருமை வெளியே தெரிய ஆரம்பித்தது. பக்தர்கள் கூட்டம் பெருகியது. முறையாகக் கல்வி கற்கவோ, வேதாந்த நூல்களைக் கற்கவோ பயிற்சி பெறாத அவரது வேதாந்த விளக்கங்களோ அற்புதமாக இருந்தன. அவர் சுவாமி விவேகானந்தர், ரமண மகரிஷி, போளூர் விட்டோபா சுவாமிகள், சேஷாத்ரி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், திரு.வி.க. என்ற பல பெரியோர்களைச் சந்தித்திருக்கிறார். அவர் சிவபூஜையோடு எப்போதும் ஸ்ரீ சக்ர பூஜையும் செய்து வந்ததால் அவரை எல்லோரும் ஸ்ரீ சக்ர அம்மா என்று அழைக்க, அதுவே பின்னர் மருவி ஸ்ரீ சக்கரையம்மா என்றாகிவிட்டது.

சக்கரையம்மாள் 1901-ஆம் ஆண்டு பிப்பிரவரி 28-ஆம் நாள் இறைவனோடு கலந்தார்கள். டாக்டர் நஞ்சுண்டராவ் திருவான்மியூரில் அம்மாவுக்கு அழகிய சமாதிக் கோவிலைக் கட்டியிருக்கிறார். அம்மா இருக்கும்போதே அவருக்குப் பௌர்ணமி அபிஷேக பூஜை செய்தார் லோகம்மாள் என்ற பெரும் பக்தை. அது இன்றும் தொடருகிறது. அது மட்டுமல்ல. அவர் மறைந்து நூறாண்டுகளுக்குப் பிறகு பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. நமது காஞ்சிப் பரமாச்சாரியார் இந்தச் சமாதிக்கு விஜயம் செய்து, ஐந்து நாள்கள் தியானம் செய்திருக்கிறார். நஞ்சுண்டராவின் நாட்குறிப்புகளிலிருந்து எழுதப்பட்ட சக்கரை அம்மாள் பற்றிய நூல் வெளிவந்திருக்கிறது.

அழகான கோவில், அதைச் சுற்றிலும் வண்ண மலர்கள் நிறைந்த நந்தவனம். ஒரு புறம் உள்ள மண்டபத்தில் பரோபகாரி டாக்டர் நஞ்சுண்டராவின் மார்பளவுச் சிலை. சமாதிக் கோவிலில் அமர்ந்த கோலத்தில் புன்சிரிப்போடு ஸ்ரீ சக்கரை அம்மாள் திருவுருவச்சிலை. தினமும் கிரமப்படியான பூஜை, மாலை நேரத்தில் பக்தர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். அம்மாவின் தொண்டில் தன்னைக் கரைத்துக் கொண்டுள்ள நண்பர் பாலகிருஷ்ணன் வரவேற்கிறார்.

ஞாயிறுதோறும் மாலையில் இசை நிகழ்ச்சி. திங்கள் கிழமைகளில் தேவார திருவாசக வகுப்புகள். ஆன்மிக சாதகர்கள் ஆலயத்தில் அதிர்வலைகளை உணருகிறார்கள். குடும்பத் தொல்லை தீர்வு, சமரசம், பிள்ளைப்பேறு, திருமணம், வேலை, பரீட்சை இவற்றில் வெற்றி அனைத்துக்கும் மேலாக அம்மா தரும் மனஅமைதி என்று பலரது அனுபவங்களும் கேட்க மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. கோயில் வளாகத்தில் வம்புப் பேச்சு, அரட்டை எதுவுமில்லை. எல்லோரும் ஒரு முனை உளத்தோடு சக்கரை அம்மாள் சிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லது கண்மூடி தியானத்தில் இருக்கிறார்கள். இந்த ஆலய தரிசனம் ஓர் அருமையான அனுபவம்.

இந்தச் சமாதி ஆலயத்தைக் காலஞ்சென்ற டாக்டர் எம்.சி. நஞ்சுண்டராவ் சமய அறக்கட்டளை என்ற பெயரில் திருமதி. சுமணா சுரேஷ் என்பவர் நடத்தி வருகிறார்.

*குறிப்பு:* தகவல்களும் படங்களும் (மேலட்டைப் படங்கள் உட்பட) என் சகோதரி திருமதி உஷா ராமசந்திரன் அவர்கள் சேகரித்துக் கொடுத்துள்ளார்கள்.

—ஆசிரியர்

## ஜய மங்கள ச்யாமளாங்கி

**பல்லவி**

ஜய மங்கள ச்யாமளாங்கியே - (ஜய)

**அ-பல்லவி**

சக்திரூபிணி பரப்ரும்மமான அகிலாண்ட கோடி
ஈஸ்வரி அம்பா - (ஜய)

**சரணம்**

மாமதுராபுரியில் ஜொலிக்கும மீனாக்ஷி
- கதம்பவனத்தில்
களிக்கும் காமாக்ஷி ஸங்கீத ரூபிணி த்ருபுரஸுந்தரி
பொற் பாதத்தைப் பணிந்து போற்றினேன்
என் தாயே - (ஜய)

- அமரகவி பூஜ்யஸ்ரீ பங்களூர் லக்ஷ்மி அம்மாள்.



With Best Compliments From :
P.S Galvasols
# 490/I, IV Phase, Peenya Industrial Area, Bangalore - 560 058 Ph : 28360113, 28362032